1982 மார்ச் 16]

யூரியா உர தட்டுப்பாடு

*வினா எண் 483—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் யூரியா உரம் தட்டுப்பாடாக உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், தட்டுப்பாடு நீங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) தமிழ் நாட்டில் யூரியா உரத்திற்கு தற்போது தட்டுப்பாடு இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, தற்சமயம் தட்டுபாடு இல்லை என்று சொல்கிறார்கள். யூரியா தட்டுப்பாடு இருந்தால் தான் அந்த நேரத்தில் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, நமக்கு யூரியா தேவையான சில நேரங்களில் இப்படிப்பட்ட தட்டுப்பாடு வருகிறது. அப்படி வராமல் இருப்பதற்கு முன் கூட்டியே இந்த இலாகா சரியான நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்படி ஒரு தட்டுப்பாடு வருமோ என்ற ஐயப்பாடு வந்தவுடனே மத்திய அரசுக்கு எழுதினோம். எங்களுக்குத் தேவையான யூரியா உரத்தைத் தரவேண்டுமென்றும், ஒதுக்கீடு செய்த யூரியாவை உடனே அனுப்ப வேண்டுமென்றும் கேட்டோம். அவர்களும் அனுப்பினார்கள். இதைப் போன்ற சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் ; தலைவரவர்களே, இங்கே உற்பத்தியாகும் நெல்லுக்கு அதிக விலை இல்லை. ஆனால் அவர்கள் தருகின்ற உரத்திற்கு அதிக விலை இருக்கிறது. ஆகவே, உரத்தின் விலையைக் கட்டுப்படுத்த மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஏற்கனவே வற்புறுத்தி ஆகிவிட்டது.

[1982 மார்ச் 16

(முற்பகல் 9.30)

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நேரங்களிலே யூரியாவிற்குத் தட்டுப் பாடு இல்லை என்றாலும் கூட கிராமங்களிலே உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கிடங்குகளில் யூரியா கிடைப்பதில்லை. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தனியார் அதிக லாபத்திற்கு விற்கின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது. அதனால் மாண்புமிகு அமைச்சரவர்கள் அவர்களுடைய இலாக்காவாக இது இல்லை என்றாலும் கூட விவசாயிகளின் நலன் கருதி அவர்களுக்குத் தேவைப்படுகின்ற காலங்களில் எல்லா கிராம கூட்டுறவுச் சங்கங் களிலும் யூரியாவினை வைத்து விற்பனை செய்வதற்குரிய வகை யிலே தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அவ் வாறு புகார் வந்தால் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இந்த யூரியா வழங்குவதிலே சிறு விவசாயிகளுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் ஏதாவது கன்சஷன் தருகிறோமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் அவ்வாறு மானியம் வழங்கு கிற முறை இருந்தது. தற்போது இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே விவசாயிகளுக்கு யூரியா வினியோகம் செய்யப்படுவதைப் பொறுத்தவரையிலே ஒவ்வோர் ஆண்டும் உயர்ந்த அளவிலே செய்யப்படுகின்றதா ? யூரியாவிற்கு மானியம் வழங்குமாறு மத்திய அரசினை மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அவ் வாறு கேட்டு மானியம் வழங்குவதாக உத்தேசம் இல்லை என்று அவர்கள் தெரிவித்து விட்டார்கள். ஒவ்வோர் ஆண்டும் யூரியா நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையிலே அதிகமாகத் தான் வினியோகம் செய்து கொண்டிருக்கிறோம். 1979-80-ல் 3,36,000 டன், 1980-81-ல் 2,73,000 டன், 1981-82-ல் 3,52,000 டன் என்ற வகையிலே வினியோகம் செய்து வருகிறோம்.